**Milo RTD உற்பத்தி தொடர்பில், நெஸ்லே நிறுவனத்தின் குருணாகல் தொழிற்சாலையில் கடைப்பிடிக்கப்படும் அதி சிறந்த நடைமுறைகள், நெஸ்லே நிறுவனத்தின் ஏனைய சர்வதேச சந்தைகளுக்கும் காட்சியளிப்பு**

*ஆசியா, ஓசியானியா மற்றும் ஆபிரிக்கா மத்தியில் 9 நாடுகளைச் சேர்ந்தவர்கள் இதில் பங்குபற்றியுள்ளனர்*

நெஸ்லே லங்கா நிறுவனம், குருணாகலிலுள்ள தனது தொழிற்சாலையில், சர்வதேச மட்டத்திலான பயிலரங்கு ஒன்றை அண்மையில் ஏற்பாடு செய்திருந்ததுடன், Milo RTD பானத்தின் உற்பத்திச் செயற்பாட்டின் போது கடைப்பிடிக்கப்படுகின்ற அதி சிறந்த நடைமுறைகள் தொடர்பில், 9 நாடுகளிலிருந்து வந்து இச்செயலமர்வில் கலந்துகொண்டவர்களுக்கு நேரடியாகக் காட்சியளிக்கப்பட்டது. ஆசியா, ஓசியானியா மற்றும் ஆபிரிக்காவின் மத்தியில் Milo RTD பானத்தை உற்பத்தி செய்கின்ற, 12 தொழிற்சாலைகளைச் சேர்ந்தவர்கள் இச்செயலமர்வில் கலந்துகொண்டு, இது தொடர்பான நிபுணத்துவத்தை வளர்த்துக் கொண்டுள்ளனர்.

நெஸ்லே குழுமத்தின் அதிநவீன தொழில்நுட்பவியல் நிபுணத்துவத்தை Milo RTD உற்பத்தி நடைமுறையில் அறிமுகப்படுத்தி, அவற்றை மேம்படுத்தி, புதிய உற்பத்தித் தர நடைமுறைகளை நெஸ்லே ஆசிய-ஓசியானியா-ஆபிரிக்க வலயத்தில் முதன்முதலாக அறிமுகப்படுத்தியிருந்த சந்தையாக, நெஸ்லேயின் குருணாகல் தொழிற்சாலை திகழ்வதால், இப்பயிலரங்கை நடாத்துவதற்காக இலங்கை தெரிவு செய்யப்பட்டிருந்தது.

சுவிட்சலாந்து, அமெரிக்கா மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகளிலுள்ள நெஸ்லே உற்பத்தித் தொழில்நுட்ப மையங்களிலிருந்து வந்து இப்பயிலரங்கில் கலந்துகொண்ட தொழில்நுட்பவியல் நிபுணர்கள், தமது தொழில்நுட்ப நிபுணத்துவம் மற்றும் அறிவைப் பகிர்ந்து கொண்டனர். Milo RDT உற்பத்தி தொடர்பான மிகச் சிறந்த தர நடைமுறைகளின் வெற்றிகரமான வரலாற்றை நெஸ்லே லங்கா நிறுவனம், இதில் கலந்துகொண்ட ஏனைய நாடுகளுடன் பகிர்ந்து கொண்டது.

நெஸ்லே லங்கா நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரான ஷிவானி ஹெக்டே அவர்கள் கூறுகையில், *''அதிநவீன உற்பத்தி நடைமுறைகள் மற்றும் செயற்பாடுகளை பயன்படுத்தி Milo RTD பானத்தை உற்பத்தி செய்வதில் ஆசிய-ஓசியானியா-ஆபிரிக்க வலயத்தில் முன்னோடிச் சந்தையாகத் திகழ்வதையிட்டு நாம் மிகவும் பெருமிதம் அடைந்துள்ளோம். எமது நுகர்வோருக்கு சுவையான மற்றும் ஊட்டச்சத்து மிக்க உற்பத்திகளை வழங்குவதில், எமது உற்பத்தி நடைமுறையின் போது நாம் கடைப்பிடிக்கின்ற அதி உயர் தரக் கட்டுப்பாடுகளை இது புலப்படுத்துகின்றது,''* என்று குறிப்பிட்டார்.

வெற்றிக்கான உத்வேக உணர்வை வளர்க்கின்ற மைலோ, பல தசாப்தங்களாக அன்னையரினதும், பிள்ளைகளினதும் அபிமானத்தை வென்றெடுத்துள்ளது. இலங்கையிலுள்ள 21,000 பாற்பண்ணையாளர்களிடமிருந்து சேகரிக்கப்படுகின்ற, புத்தம்புதிய, நலச்செழுமை கொண்ட, அதியுயர் தரம் கொண்ட பாலை உபயோகித்து தயாரிக்கப்படுகின்ற Milo RTD, மகத்தான சொக்கிலேற்று மோல்ற்று சுவையை வழங்குவதற்கு, பொற்செழுமை மிக்க மோல்ற்று மற்றும் மிகச் சிறந்த கொக்கோ விதைகளிலிருந்து பெறப்படுகின்ற கொக்கோ ஆகியவற்றையும் மூலப்பொருட்களாகக் கொண்டுள்ளது.